**கொழும்பு பல்கலைக்கழகம் - 2022**

-----------------------------------------------------------------

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 அபிப்பிராயம்**

கொழும்பு பல்கலைக்கழகத்தின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்கள், பொழிப்பாக்கப்பட்ட முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளுடன் கூடிய 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1978 இன் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் 107(5) உப பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையினதும், 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தினதும் ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

நிதிக்கூற்றுக்கள் பல்கலைக்கழகத்தின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இக.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்**

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, பல்கலைக்கழகத்தின் தொடர்ந்தியங்கும் இயலுமையை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாக இருப்பதுடன் முகாமைத்துவமானது பல்கலைக்கழகத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் மற்றும் மன்றம் தொடர்ந்தியங்குவதற்கு உரிய விடயங்களை வெளிப்படுத்துவதும் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாகும்.

பல்கலைக்கழகத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் பல்கலைக்கழகத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி பல்கலைக்கழகம் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் காரணமாக பல்கலைக்கழகத்தின் தொடர்ந்து இயங்குவது தொடர்பாக போதியளவில் நிச்சயமற்ற நிலைமையொன்று இருக்கின்றதா என்பது தொடர்பாக பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு கணக்கீட்டிற்காக பல்கலைக்கழகத்தின் தொடர்ந்தியங்குவது தொடர்பாக அடிப்படையின் பயன்பாட்டின் பொருத்தப்பாட்டினை தீர்மானிக்கின்றது. பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், நிதிக்கூற்றுக்களில் அது தொடர்பாக வெளிப்படுத்துவதற்கு எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டியதுடன் அவ்வெளிப்படுத்தல்கள் பொருண்மையாக இல்லாதிருந்தால் எனது அபிப்பிராயத்தை வெளிப்படுத்த வேண்டும். எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் மன்றத்தின் தொடர்ந்தியங்கும் நிலைமையை முடிவுறுத்த நேரலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது பல்கலைக்கழகத்தின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது பல்கலைக்கழகத்தின் நிர்வாக சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க பல்கலைக்கழகம் செயற்படுகின்றதா எனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்

- வளங்கள் சிக்கனமாக, செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

### 1.5 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

#### 1.5.1 பெறவேண்டிய பணம்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 01 வருடத்திற்கும் 35 வருடங்களுக்கும் இடையிலான காலத்தில் இருந்து காணப்படுகின்ற உடன்படிக்கையை மீறிய 34 விரிவுரையாளர்களிம் இருந்து அறவிட வேண்டிய ரூபா 138,919,322 தொகையை அறவிடுவதற்கு தவறியிருந்தது. அதில் கற்கை விடுமுறைக்காக வெளிநாடு சென்றிருக்கும் போது 2022 ஆம் ஆண்டில் சேவையை முடிவுறுத்திய 12 உத்தியோகத்தர்களிடம் இருந்து அறவிடுவதற்குள்ள தொகை ரூபா 72,294,305 ஆகும். | 2022 ஆம் ஆண்டில் பிணை முறிகளை மீறிய 13 விரிவுரையாளர்களிடம் இருந்து ரூபா 51,039,160.67 தொகையும், 2022 ஆம் ஆண்டிற்கு முன்னர் உடன்படிக்கை மீறிய 26 விரிவுரையாளர்களிடம் இருந்து ரூபா 106,015,716.56 தொகையும் 2023.05.31 ஆம் திகதி பல்கலைக்கழகம் வட்டியுடன் அறவிட்டிருந்தது. அவ்வாறே உடன்படிக்கை மீறிய ஐந்து விரிவுரையாளர்களிடம் இருந்து மொத்த பிணைமுறி பணமும் செலுத்தப்பட்டிருந்த போதும் உரிய வட்டி செலுத்துதல் நிராகரிக்கப்பட்டமையினால் அதனை அறவிடுவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அவ்வாறே பிணைமுறியை மீறிய 06 விரிவுரையாளர்கள் தொடர்பாக வழக்கு நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. | விரைவாக அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | தேசிய நூலகம் மற்றும் தகவல் விஞ்ஞான நிறுவனம் (NILIS) இற்காக 2019, 2020 மற்றும் 2021 ஆம் ஆண்டுகளின் போது | ரூபா 1,059,350.85 தொகை NILIS நிறுவனத்தால் 2023 ஆம் ஆண்டில் கொழும்பு பல்கலைக்கழகத்திற்கு மீளளிப்பு செய்யப்பட்டுள்ளது. | பண அறவீடுகள் நாளது வரையாக்கப்ப |

| | | | |
|---|---|---|---|
| | செலவிடப்பட்ட மின்சார செலவினத்திற்காக அறவிட வேண்டிய ரூபா 2,237,312 மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் அறவிடப்பட்டிருக்கவில்லை. | | டல் வேண்டும். |
| (இ) | 2018 ஆம் ஆண்டின் போது விவசாய தொழில்நுட்பம் மற்றும் கிராமிய விஞ்ஞான நிறுவனத்திற்கு பல்கலைக்கழக அபிவிருத்தி நிதியத்தில் இருந்து வழங்கப்பட்ட ரூபா 5,000,000 ஆன கடன் தொகை மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆம் திகதி வரையிலும் அறவிடப்பட்டிருக்கவில்லை. | 2023 ஆம் ஆண்டின் போது அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | பணத்தை அறவீடுகள் நாளது வரையாக்கப்படல் வேண்டும். |

### 1.5.2 செலுத்த வேண்டிய பணம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 01 வருடங்கள் முதல் 03 வருடங்கள் வரையான பழைய ரூபா 20,663,677 கூட்டுத்தொயையான செலுத்த வேண்டிய மீதி மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் தீர்த்து வைக்கப்பட்டிருக்கவில்லை. | ரூபா 17,757,289 தொகை 2023 ஆம் ஆண்டின் போது செலுத்துவதற்கும் ரூபா 626,368 தொகை வருமானத்திற்கு எடுப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. நீச்சல் தடாகத்தின் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்படாமையினால் அந்த பணம் வேறொரு நடவடிக்கைக்காக ஈடுபடுத்துவதற்கு பழைய மாணவர் சங்கத்துடன் நடவடிக்கை எடுக்கப்படும். | உரிய மீதிகளை தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 1.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

| | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | 1994 ஏப்ரல் 20 ஆம் திகதிய இலக்கம் 30/94 என்ற அரச கணக்குகள் சுற்றறிக்கை மற்றும் 2019 யூலை 25 ஆம் திகதிய SC & PMU/Gant/19 என்ற வெளிநாட்டு வளங்கள் திணைக்கள பணிப்பாளர் நாயகத்தின் கடிதம் | வெளிநாட்டு வளங்கள் திணைக்களத்தின் அனுபவம் மற்றும் இணக்கப்பாடு இன்றி 2022 ஆம் ஆண்டில் கிடைக்கப் பெற்ற கூட்டு மொத்தமான ரூபா 97,310,017 ஆன வெளிநாட்டு மானியம் பல்கலைக்கழத்திற்கு நேரடியாக பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. | 02 செயற்திட்டங்கள் 19 இற்கு முன்னர் ஆரம்பிக்கப்பட்டிருந்ததுடன், ரூபா 1,512,000 ஆன டெங்கு செயற்திட்டத்திற்காக கிடைத்த மானியம் தொடர்பான அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை. 02 மானியங்கள் தொடர்பாக பலக்லைக்கழகத்தின் சர்வதேச பிரிவிற்கு ஆவணங்கள் கையளிக்கப்பட்டுள்ளதுடன், CONTESSA செயற்திட்டம் வெளிநாட்டு உதவி கிடைக்கின்ற ஆராய்ச்சி செயற்திட்டம் அல்லாத இயலளவு அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம் ஆகும். | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | பல்கலைக்கழ | கல்விசார் பதவி | இது பல்கலைக்கழ மானியங்கள் | தாபன |

| | | | | |
|---|---|---|---|---|
| | மானியங்கள் ஆணைக்குழு மற்றும் உயர் கல்வி நிறுவனங்களுக்கான தாபன விதிக் கோவையின் XX ஆம் அத்தியாயத்தின் 3.1 ஆம் பிரிவு | அணியினரின் வருகை மற்றும் வெளிச் செல்கைகளை உறுதிப்படுத்தடுத்தாமல் சம்பளம் மற்றும் படிகளாக கூட்டுமொத்தமாக ரூபா 3,280,088,379 தொகை மீளாய்வாண்டில் செலுத்தப்பட்டிருந்தது. | ஆணைக்குழுவினால் மேற்கொள்ளப்பட வேண்டிய கொள்கை ரீதியான தீர்மானமாக இருந்தமையால் பல்கலைக்கழ நிர்வாகத்திற்கு புறம்பான நடவடிக்கையாகும். | விதிக் கோவையின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) | தேசிய நூலகம் மற்றும் ஆவணப்படுத்தல் சேவை சபையின் 2016 திசெம்பர் 22 ஆம் திகதிய இலக்கம் 2004/புச/1(2016 திருத்த) செய்யப்பட்ட சுற்றறிக்கை | பல்கலைக்கழகத்தின் நூலக புத்தகங்களை உள்ளடக்கிய பொருட்கள் தொடர்பாக 2017 ஆம் ஆண்டின் பின்னர் வருடாந்த மெய்மெய்யாய்வு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | 2022.01.03 ஆம் திகதிய ஆணைக்குழு சுற்றறிக்கை 01/2022 இன் பிரகாரம் 2023 ஆம் ஆண்டிற்கான இருப்பு மெய்மையாய்வு தற்போது திட்டமிடப்பட்டுள்ளதுடன், அதற்காக குழு அங்கத்தவர்கள் நியமிப்பதற்கு பல்கலைக்கழக ஆழுகை சபையிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. | சுற்றறிக்கையின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவுகள் ரூபா 3,330,270,379 மிகையாக இருந்ததுடன், அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மிகை ரூபா 3,539,741,375 ஆகும். அதன் பிரகாரம் நிதி விளைவுகளில் ரூபா 209,470,996 வீழ்ச்சி அவதானிக்கப்பட்டது. இந்த வீழ்ச்சிக்கு அரசாங்கத்தின் மூலதன மானியம் குறைவடைந்தமை மற்றும் ஏனைய மீண்டெழும் செலவினங்கள் அதிகரித்தமை பிரதான காரணமாக இருந்தது.

### 2.2 பிரதான வருமானம் மற்றும் செலவின விடயங்களின் முக்கிய பகுப்பாய்வு

(அ) மீளாய்வாண்டின் போது பல்கலைக்கழகத்தின் ஒட்டுமொத்த வருமானத்தில் 25 சதவீதம் அளவில் அரசாங்கத்தின் மானியங்களை உள்ளடக்கியிருந்ததுடன், கடந்த ஆண்டுடன் ஒப்பிடும் போது அரசாங்கத்தின் மானியம் 19 சதவீதத்தால் குறைவடைந்திருந்தது. மேலும் உள்ளக வருமானம் 92 சதவீததாலும், ஏனைய மீண்டெழும் மானியம் 72 சதவீதத்தாலும் அதிகரித்திருந்தது.

(ஆ) கடந்த ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டில் ஏனைய மீண்டெழும் செலவினம் 54 சதவீதத்தால் அதிகரித்திருந்ததுடன், மூலதன சொத்துக்களின் அபிவிருத்திச் செலவினம் 49 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்திருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பெறுமதி ரூபா 25,230,500,000 ஆன 06 காணிகள் மற்றும் நிதிக் கூற்றுக்களில் பெறுமதி காண்பிக்கப்படாத 03 காணிகள் காணப்படுவதுடன், இந்த காணிகள் பல்கலைக்கழிகத்திற்கு சட்டரீதியாக கையேற்பதற்கு | இதனிடையே 06 காணிகள் அரசாங்கத்திற்கு சொந்தமான இருந்ததுடன், 03 காணிகளின் உரித்தை கண்டறிய முடியாதிருந்தமையும் இந்த காணிகளை பல்கலைக்கழகத்தில் | சொத்துக்களை சரியாக வெளிப்படுத்தி கையேற்கும் நடவடிக்கைகள் விரைவாக பூர்த்தி செய்யப்படல் |

| | | |
|---|---|---|
| மீளாய்வாண்டின் போதும் தவறியிருந்தது. | கையேற்கும் மிகுதி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றதையும் அறியத்தருகின்றோம். நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கப்படாத காணிகள் 2023 ஆம் ஆண்டில் வெளிப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | வேண்டும். |

**3.2 சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| சட்ட ரீதியான அங்கீகாரம் இன்றி பல்கலைக்கழகத்தின் விஞ்ஞான பீடத்தின் பதவி அணியினரை ஈடுபடுத்தி Colombo Science and Technology Cell என்ற பெயரில் பிணையால் வரையறுக்கப்பட்ட கம்பனியொன்று 2013 ஆம் ஆண்டின் போது ஸ்தாபிக்கப்பட்டு 05 வருடங்கள் அளவிலான காலத்தின் பின்னர் 2018 ஏப்ரல் 02 ஆம் திகதி பல்கலைக்கழகத்துடன், புரிந்துணர்வு உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டிருந்தது. கம்பனி உழைக்கின்ற வருமானத்தில் பல்கலைக்கழத்திற்கு வழங்கப்பட வேண்டிய பங்களிப்பு தொடர்பாக புரிந்துணர்வு உடன்படிக்கையில் குறிப்பிடப்படாதிருந்ததுடன், கடந்த 09 வருட காலப் பகுதியில் பல்கலைக்கழகத்திற்கு வழங்கப்பட்டிருந்த பங்களிப்பு ரூபா 1,885,690 மாத்திரம் ஆகும். | கம்பனி ஸ்தாபிப்பதற்கு பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவில் இருந்து அங்கீகாரம் பெறப்பட்டிருந்ததுடன், அமைச்சரவை அங்கீகாரம் பெறுவதற்காக 2015 ஆம் ஆண்டின் போது பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவிற்கு ஆவணங்கள் சமர்ப்பிக்கப்பட்ட பின் புரிந்துணர்வு உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டிருந்தது. | கம்பனியை ஸ்தாபித்தல் சட்டத்தின் மூலம் ஏற்பாடுகள் வழங்கப்படாதவிடத்து அதற்குரிய அங்கீகாரம் பெறப்படல் வேண்டும். |

**3.3 விளைவற்ற அல்லது குறைவாகப் பயன்படுத்தப்பட்ட ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2020 மற்றும் 2021 ஆம் ஆண்டுகளின் போது ரூபா 16,930,946 செலவில் அபிவிருத்தி செய்யப்பட்ட சட்ட பீடத்தின் கேட்போர் கூடத்திற்காக தேவையான கதிரைகள் கொள்வனவு செய்யப்படாமையின் காரணமாக மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் கேட்போர்கூடம் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. | 2022 ஆம் ஆண்டிற்கு ஒதுக்கப்பட்டிருந்த பணம் கிடைக்காமை மற்றும் 2022.04.06 ஆம் திகதி விநியோகிக்கப்பட்ட அரச பாதீட்டு சுற்றறிக்கை இலக்கம் 03/2022 இன் மூலம் சகல அரசாங்க செலவினங்களையும் கட்டுப்படுத்துமாறும், வேலைகள் மற்றும் பொருட் கொள்வனவுகளை நிறுத்துமாறும் அறிவிக்கப்பட்டமையால் அதன் பிரகாரம் செயற்பட வேண்டி ஏற்பட்டிருந்தது. | விரைவாக பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |